# இஸ்லாமிய குடும்பக் கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவமும், அவர்கள் கல்வி, தொழில் துறைகளில் எதிர்கொள்ளும் சவால்களும்

A.M.F.Sharmina [1]& M.S.F. Nisfa[2]

*[1&2]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Sri Lanka*

*[1]fathimashrmy@gmail.com, [2]amna7201@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*குடும்பத்தின் மூலமாகவே சமூகம் எனும் கட்டிடம் கட்டமைக்கப்படுகின்றது. அக்கட்டடத்தின் அஸ்திவாரமாகவும் குடும்பமே அமையப் பெறுகிறது. குடும்ப அமைப்பு வலிமையாக அமையும் போது சமூக அமைப்பும் வலிமையுடையதாக மாறுகின்றது. இதற்கென்று இஸ்லாம் குடும்ப வாழ்வு அழகாகவும் ஸ்திரமாகவும் அமைய பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இஸ்லாமிய குடும்ப கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவம், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அதற்கான தீர்வுகள் மற்றும் இஸ்லாம் குடும்ப அமைப்பிற்கு வழங்கக்கூடிய முக்கியத்துவம் எக்காலத்திற்கும் ஏற்றவகையிலும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் அமையப் பெற்றுள்ளது. அந்தவகையில் இஸ்லாமிய குடும்ப கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவம் மற்றும் அவர்கள் கல்வி, தொழில் துறைகளில் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றுக்கான இஸ்லாமிய வழிகாட்டல்களை கண்டறிதலை நோக்கமாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்புரீதியான ஆய்வு வடிவத்தை தழுவி முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய வரலாறு, தற்கால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள், ஆய்வுகள் போன்றவற்றில் காணப்படும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பெண்கள் தொடர்பாக எழக்கூடிய அனைத்து பிரச்சினைகளுக்கும் இஸ்லாம் அழகான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாக அமைந்துள்ளது. இவ்வாய்வு பெண்கள் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு துணையாக அமையவல்லது என எதிர்பார்க்கப்படுகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *இஸ்லாமிய குடும்பம், குடும்பம், முஸ்லிம் பெண்கள், பெண்ணுரிமை*

---

## *1. ஆய்வுப் பின்னணி*

*சமூகவியல் ஆய்வுக்குட்படுகின்ற விடயங்களிலே சமூக நிறுவனங்கள் மிக முக்கியமானவையாகும். ஒரு சமூகத்தை நெறிப்படுத்துவதில் சமூக நிறுவனங்களின் பங்கு மிகக் காத்திரமானவையாக காணப்படுகின்றதோடு, சமூகத்திலுள்ள அனைத்து நிறுவனங்களுக்கெல்லாம் அடிப்படை நிறுவனமாக குடும்பம் காணப்படுகின்றது. குழந்தையொன்று பிறந்து வளரும் முதலிடம் குடும்பமாகும். குடும்பத்திலிருந்து பல்வேறு விடயங்களைக் கண்டு கேட்டு சிறந்த சமூகமயமாதலைப் பெறுகின்ற குழந்தை பூரணமான ஆளுமை மிக்கவனாக வளர்கின்றது. இதனூடாக சிறந்த உயிரோட்டமுள்ள சமூகமொன்று கட்டியெழுப்பப்படுகின்றது என்பது சமூகவியலாளர்களின் கருத்தாகும் (ரிஸ்வான், 2009). சமூகம்*

*என்பது பல குடும்பங்களின் கூட்டிணைவாகும். குடும்பங்கள் தனிமனிதனில் இருந்து உருவாகின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை சீர்படுத்திக் கொள்வதன் மூலம் குடும்பங்கள் சீராகின்றன. குடும்பங்கள் சீராக அமையும்போது சமூகங்கள் சீராக அமையும் (மஸாஹிர் & பேகம், 2017). குடும்பம் எனும் போது இரத்த உறவாலோ, திருமண உறவாலோ அல்லது சுவீகாரம்(தத்தெடுத்தல்) போன்றவற்றாலோ சட்டபூர்வமான முறையில் அமைந்த ஒரு உறைவிடக் குழுவாகும். அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் 16(3) விதிப்படி "குடும்பம்" என்பது சமுகத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான குழு அலகாகும் என்பதோடு, அது சமுகத்தாலும் தேசத்தாலும் பாதுகாக்கப்பட வேண்டியதாகும் (றியாஸ் முஹம்மத், 2012).*

*குடும்பத்தின் மூலமாகவே சமூகம் எனும் கட்டிடம் கட்டமைக்கப்படுகின்றது. அக்கட்டடத்தின் அஸ்திவாரமாகவும் குடும்பமே அமையப் பெறுகிறது. குடும்ப அமைப்பு வலிமையாக அமையும் போது சமூக அமைப்பும் வலிமையுடையதாக மாறுகின்றது. மாறாக குடும்ப அமைப்பு வலுவிழக்கும் போது சமூக அமைப்பும் வலுவிழந்துவிடும் (அப்துர் ரஹ்மான், 2021). அந்த வகையில், குடும்பமானது ஆணும் பெண்ணும் திருமணத்தின் மூலம் இணைந்து கொண்டு சமூகமயமாதல், இனப்பெருக்கம், கல்வி, மதம், பிள்ளைவளர்ப்பு, பாதுகாப்பு, உளவியல், அன்பு, பாசம், பராமரிப்பு போன்ற அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுவது மட்டுமல்லாது, சமூகத்திற்கு தேவையான அனைத்தையும் வழங்கும் பணியினையும் மேற்கொள்கின்றது (றிஸ்வான், 2009).*

*குடும்பமே சமுகத்தில் வாழும் ஒவ்வொரு தனிநபரினதும் பாதுகாப்பையும், பராமரிப்பையும் முதலில் உறுதி செய்கின்றது. இதனாலேயே 1994 ஆம் ஆண்டை "சர்வதேச குடும்ப நல ஆண்டு"* (International Year of The Family *என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு வருடமும் மே மாதம் 15 ஆம் திகதி சர்வதேச குடும்ப தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது (றியாஸ் முஹம்மத், 2012). இஸ்லாத்தைப் பொறுத்தவரையில், இஸ்லாமிய வாழ்வின் அடித்தளமாக காணப்படுவது குடும்பமாகும். குடும்பத்தின் தலைவனும் தலைவியும் இஸ்லாம் காட்டும் பாதையில் நடக்கும் போது அது இஸ்லாம் விரும்பும் இலட்சியக் குடும்பமாக அமைவதோடு, சிறந்த குடும்பங்கள் உருவாகாத நிலையில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியாத நிலையும் ஏற்படுகின்றது. இஸ்லாம் குடும்பம் எனும் நிறுவனத்தை மிகப் புனிதமான ஒன்றாகக் கருதுகிறது. அது ஒரு இயற்கை மார்க்கம் என்ற அடிப்படையில், அது மனித அபிவிருத்தியில் இயற்கை வரம்பை மீறாமல் செயற்படும். குடும்ப அமைப்புக்கு அதிகூடிய முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது. இதனால், இஸ்லாம் குடும்பம் சார்ந்த மார்க்கமாக காணப்படுகின்றது (றியாஸ் முஹம்மத், 2012). இஸ்லாம் குடும்பத்தை வெறும் நிறுவனமாகப் பார்க்காது இதற்கான சட்ட திட்டங்களையும் வரைந்துள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள உறவுகளுடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், குடும்பத்தில் ஒவ்வொருவரதும் உரிமைகள், கடமைகள் பற்றி அல்குர்ஆனும் ஹதீஸ{ம் விலாவாரியாகப் பேசியுள்ளமை அதன் முக்கியத்துவத்தையே எடுத்துக் காட்டுகின்றது (மஸாஹிர் & பேகம், 2017).*

*இஸ்லாமிய ஷரீஆவை பொறுத்தவரை குடும்ப உருவாக்கத்தின் அடிப்படை நோக்கங்களாக பரஸ்பரம் அமைதி, அன்பு, இரக்கம், உதவி, உபகாரம் செய்தல் போன்ற பகுதிகளை தெளிவாகவே விளக்கியுள்ளது* (Najmuddeen, nd). ***"இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய***


ISBN: 978-624-5736-55-3

***(உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன" (அல்குர்ஆன் 30:21).*** *எனவே ஒரு குடும்பத்தின் பணிகளாக, சமூகமயமாதலை மேற்கொள்ளல், மார்க்கத்தை கற்றுக் கொடுத்தல், கல்வி புகட்டுதல், பொருளாதாரத்தை மேம்படுத்தல், ஆளுமை விருத்தியை ஒருவருக்கு வழங்கல், உளவியல் ரீதியான மனநிம்மதியை வழங்குதல், பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல், சந்ததிப் பெருக்கத்தை மேற்கொள்ளல், தலைமைத்துவப் பயிற்சியை வழங்குதல், சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தல், ஒழுக்க விழுமியங்களைப் பயிற்றுவித்தல் போன்ற பல அம்சங்கள் காணப்படுகின்றன (மஸாஹிர் & பேகம், 2017). இந்த அடிப்படையில் குடும்பத்தில் ஒரு ஆண் ஒரு குடும்பத்தை பராமரிக்கக் கூடியவனாக இருக்கின்றான். ஆனால் ஒரு பெண் ஒரு தலைமுறையை உருவாக்குபவளாக காணப்படுகின்றாள். அனைத்துத் துறை சார்ந்த ஆளுமை கொண்டவர்களையும் உருவாக்கக்கூடியவாறான ஒரு உயர்ந்த பணியை பெண் தன்னுடைய முழுநேர வாழ்நாள் பணியாக செய்து வருகின்றாள் (மஸிஹ்த்தீன் இனாமுல்லாஹ், 2022). இங்கு பெண்களின் பிரதான பொறுப்பு ஒரு தாயாக, குடும்பத் தலைவியாக இருந்து மிகச்சிறந்த சமூகமொன்றை உருவாக்குவதாகும். இது பெண் என்பவள் வீட்டில் முடங்கிக் கிடக்க வேண்டியவர் என்னும் கருத்தைத் தராது. பெண்கள் ஆண்களுக்கு பணிவிடை செய்வதற்காக மட்டும் படைக்கபட்டவர்களல்ல. ஒரு பெண்ணிண் பிரதான பணி எப்போதும் வீட்டு வேலைகளை செய்து கொண்டிருப்பது என்ற கருத்தை நாம் மார்க்கத்தில் எங்கும் காண முடியாது. அப்படி ஒரு பெண் இருப்பது கடமையுமல்ல. மாறாக அது வரவேற்கத்தக்கது என்பதே பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்தாக காணப்படுகின்றது. எனவே, அவளது பணியை அவள் செய்வதற்கு யாரும் தடையாக இருக்க முடியாது (மஸ்ஹர் ஸகரிய்யா, 2012).*

*இதன் படி, அதிகமான வீடுகளில் உழைப்பவர்கள் ஆண்களாகவும் வீட்டுவேலைகளை செய்பவர்கள் பெண்களாகவும் கவனிக்கும் பாரம்பரியம் இருந்து வருகிறது. பெண்கள் என்றால் திருமணம், இல்லம், இல்லறம், பிள்ளை பராமரிப்பு, சமையல், வீடு, சுற்றுச் சூழலை சுத்த பவித்திரமாக வைத்திருத்தல் என வாழ்வில் அவர்களது வகிபாகம் வரையறை செய்யப்பட்டிருந்தது. உண்மையில் ஆண்களின் உழைப்பிற்கு நிகராக எவ்விதத்திலும் குறைவில்லாது அல்லது அதற்கும் மேல் இல்லத்தரசிகளின் கடமைகள் பொறுப்புக்கள் காணப்படுகின்றன (மஸி{ஹத்தீன் இனாமுல்லாஹ், 2022). இங்கு பெரும்பாலும ஆண்களின் பொறுப்புகள்; சமூகம் சார்ந்தும் பெண்களின் பொறுப்புகள் வீடு சார்ந்தும் காணப்படுகின்றன. அதற்கு அவரவர்களின் இயல்பூக்கங்களும் உடல்வாகும் காரணமாகின்றன. அவ்விருசாராரும் அடுத்தவரின் கடமைகளில் பங்கு பெறுவது விரும்பத்தக்கதாக அமைகின்றது.*

*இவ்வாறு இஸ்லாம் ஒரு குடும்ப வாழ்வு அழகாகவும் ஸ்திரமாகவும் அமைய பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது (மஸாஹிர் & பேகம், 2017) என்ற அடிப்படையில் இவ்வாய்வானது, இஸ்லாமிய குடும்ப கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவம் மற்றும் அவர்கள் கல்வி, தொழில் துறைகளில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி ஆராய முயற்சி செய்கின்றது.*


ISBN: 978-624-5736-55-3

*2.* ***ஆய்வு நோக்கங்கள்***

***1.****இஸ்லாமிய குடும்பக் கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துத்தைக் கண்டறிதல்.*

***2.****கல்வி, தொழில் துறைகளில் பெண்கள் எதிர்நோக்கக் கூடிய சவால்களை இனங்கண்டு, அவற்றுக்கு இஸ்லாத்தின் வழிகாட்டல்களை முன்வைத்தல்.*

*3.* ***ஆய்வு முறைமை***

*பண்பு ரீதியான ஆய்வு வடிவத்தைத் தழுவி முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய வரலாறு, தற்கால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள், ஆய்வுகள் போன்றவற்றில் காணப்படும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

*4.* ***கலந்துரையாடலும் பெறுபேறுகளும்***

*4.1* ***இஸ்லாமிய குடும்ப கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவம்***

*தனிமனித முன்னேற்றத்தின் மூலமே சமூகம் முன்னேற்றத்தை அடைய முடியும் என வலியுறுத்துவதன் ஊடாக சமூக முன்னேற்றத்திற்குப் பணியாற்ற ஒவ்வொரு தனிமனிதனையும் இஸ்லாம் தூண்டுகின்றது.* ***“அல்-அஃமாலுஸ் ஸாலிஹா”*** *எனும் நற்செயல்கள் மூலம் தனக்குரிய கடமைகளையும் மனித இனத்துக்குரிய கடமைகளையும் செய்வதன் மூலம் இந்த முன்னேற்றத்தை அடைய முடியும் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது. குடும்பம் ஆணும் பெண்ணும் திருமணம் எனும் பந்தத்தின் மூலம் சட்டரீதியாக இணைந்து உருவாக்கும் நிறுவனமாகும். குடும்பங்கள் அன்பு, பாசம், ஒத்துழைப்பு, விட்டுக்கொடுப்பு, கூட்டுறவு, அரவணைப்பு, புரிந்துணர்வு முதலிய பண்புகளை ஒருவனில் வளர்க்கக் கூடியதாக அமைய வேண்டும் அப்போதுதான் ஒருவனை சமுதாய வாழ்வில் பங்கு பற்றத் தகுதியுள்ளவனாக மாற்றுகின்ற கலைக்கூடமாகவும் குடும்பங்கள் திகழும் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது (மஸாஹிர் & பேகம், 2017).*

*உயிரினங்கள் மத்தியில் ஆண் பெண் என்ற இரு சாராரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவர்களாவர். ஒன்றோடொன்று இணைந்து ஒன்றையொன்று புரிந்தும் வாழ்வதன் மூலமே ஒவ்வொரு உயிரினங்களினதும் இருப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த இயற்கை நியதி எல்லா வகையான உயிரினங்கள் மத்தியிலும் எக்காலத்திலும் ஒரே விதமாகவே பின்பற்றப்பட்டு வருகின்றது. என்றாலும், மனித இனத்தில் மாத்திரம் அது விதிவிலக்கான ஒன்றாகவே காணப்படுகின்றது. மனித இனத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் புரிந்துணர்வு, இணைப்பு என்பன என்றும் ஒரேவிதமாக இருந்ததில்லை. அவ்வப்போது பெண்கள் சமூகத்தில் மதிக்கப்பட்டாலும், பெரும்பாலும் ஆண்களின் அத்துமீறல்களினால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகவும், உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். இன்றைய காலத்திலும், நவீன சிந்தனை விட்ட தவறுகளால் இன்றைய பெண்கள் குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில் சம அந்தஸ்துடன் வாழும் உரிமையைப் பெற்று இருந்தாலும் கூட*


ISBN: 978-624-5736-55-3

*பெண்களுக்கு உரிய அந்தஸ்துடன் வாழ்வதற்கான உரிமையை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை (ஜுனைத், 2020).*

*மனித வரலாற்றில் ஆணாதிக்க சிந்தனையே அதிகமாக மேலோங்கியிருந்தது. இதன் காரணமாக பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும், அநீதிகளும் ஏராளம். இஸ்லாம் ஆரம்பித்த காலமாகிய ஜாஹிலிய்யாக் காலத்தில் ஆணாதிக்கம் எல்லை மீறி இருந்தது. வீட்டில் கூட ஒரு பெண் தனது உயிருக்கோ, கற்புக்கோ ஆபத்தில்லாமல் நிம்மதியாய் இருக்க முடியாதிருந்தாள். இக்காலகட்டத்தில்தான் ஒரு பெண் தன்னந் தனியாக பயணம் செய்யும் அளவு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல் இஸ்லாத்தின் இலட்சியமாக முன்வைக்கப்பட்டது. நபியவர்கள் தன் தோழருக்கு ஆறுதல் கூறும்போது தெரிவித்த வார்த்தை இதை உறுதிசெய்கிறது (ஜுனைத், 2020).* ***"நிச்சயமாக ஒரு காலம் வரும் அப்போது ஒரு பெண் பயண அச்சமின்றி ஸன்ஆவில் இருந்து ஹழரமௌத் வரை தன்னந் தனியாகச் செல்வாள்"*** *(ஸஹீஹ் புஹாரி:6544). நபியவர்களின் இக்கூற்று ஆண்கள் பெண்களை மிகைப்பதற்குப் பதிலாக, பெண்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பாங்கை ஆண்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியது. எனவே, ஒரு பெண் மகளாக இருக்கும்போது தந்தையின் பூரண பாதுகாப்பையும், சகோதரியாக இருக்கும்போது தன் சகோதரர்களின் பாதுகாப்பையும், மனைவியாக இருக்கும்போது கணவனின் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்கிறாள். அவள் தாயாக மாறும்போது, அவளது அந்தஸ்து இஸ்லாத்தில் மேலும் உயர்கிறது. அவளது பாதத்தின் கீழ்த்தான் சுவர்க்கம் இருக்கிறது எனக் கூறி, தாய்க்குப் பணிவிடை செய்வதை பிள்ளைகளின் கடமை எனப் போதிக்கிறது (ஜுனைத், 2020).*

*எனவே இஸ்லாமிய கண்ணோட்டத்தில் குடும்ப கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவம் சிறப்பான முறையில் அமையப் பெற்றுள்ளது. இஸ்லாத்தில் பெண்களுக்குச் சிறப்பான மேன்மையைக் கொடுத்ததன் மூலம் இஸ்லாம் அவர்களின் நிலையை மாற்றியது. மேலும் அவர்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்கான வெகுமதியையும் அறிவித்தது (கபூர்தீன், 2019). ஒரு தம்பதியின் செயல்களைப் பொறுத்து இல்லம் என்பது சொர்க்கமாகவோ நரகமாகவோ இருக்கலாம். இல்லத்தின் அன்றாடச் செயல்பாடுகளின் பொறுப்பை வகிப்பவள் என்ற முறையில் மனைவியானவள் இல்லத்தின் சூழலையும் உணர்வையும் உருவாக்குகிறாள் (ஆயிஷா லெமு, 2016). அதன் படி பல்வேறு பொறுப்புகளை சுமந்தவள் என்ற வகையிலும் சமூகத்திலும், குடும்பத்தில் மகளாக, மனைவியாக, தாயாக பல பாத்திரங்களை வகிக்கின்றவள் என்ற வகையிலும் அதிக முக்கியம் பெரும் நபராக காணப்படுகின்றாள்.*

*மனைவியின் கடமைகள் தொடர்பாக மஸாஹிர் மற்றும் பேகம் (2017) போன்றோர் கூறும் போது, கணவனின் உரிமைகளைப் பாதுகாத்தல், உளவியல் தேவைகளை நிறைவேற்றல், வீட்டு நிர்வாகத்தை மேற்கொள்ளல், கணவனுக்கு கட்டுப்படுதல், கணவனின் பாலியல் தேவைகளை நிறைவேற்றல், கணவனின் செல்வங்களையும் பொருட்களையும் பாதுகாத்தல், கணவனின் உறவினர்களுடன் நல்ல முறையில் நடத்தல் போன்ற பல விடயங்களை சுட்டிக் காட்டுகின்றனர். அதற்கு ஆதாரங்களாக,*

*''****மனிதர்களில் ஒருவர் மற்றவருக்கு சிரம்பணியுமாறு நான் ஆணையிடுவதாக இருந்தால் பெண் தனது கணவனுக்கு சிரம்பணியும்படி ஆணையிட்டிருப்பேன்"*** *(அத்திர்மிதி).*

*"**எந்தப் பெண் தன்னைக் குறித்து தன்னுடைய கணவன் திருப்தியடைந்த நிலையில் மரணிப்பாளோ அவள் சுவர்க்கம் நுழைவாள்"** (இப்னு மாஜா, அத்திர்மிதி).*

*"**சிறந்த பெண் நீ அவளைப் பார்த்தால் அவள் உன்னை சந்தோஷப்படுத்துவாள். நீ ஏவினால் உனக்கு வழிப்படுவாள், நீ மறைவில் இருந்தால் அவளையும் உனது சொத்துக்களையும் பாதுகாப்பாள்"** (அந்நஸாஈ:3231).*

*ஆயிஷா லெமு (2016) பெண் தொடர்பாக பேசும் போது, உடலளவிலும் சரி, மனதளவிலும் சரி, நல்ல வண்ணச் சேர்க்கைகள், சிறப்பாகத் தேர்வுசெய்யப்பட்ட வீட்டுப் பொருட்கள், சுகமான இதமான சூழல் என அனைத்துமே இனிமையான இல்லத்தை உருவாக்குவதில் பங்களிக்கின்றன என்ற வகையில் குடும்பம் ஒன்றாக இருக்கவேண்டும் என்று விரும்பும் மனைவி இல்லம் என்பது வசிப்பதற்கு இனிமையானதாக இருப்பதை உறுதிசெய்யவேண்டும். இன்னும் இஸ்லாம் ஒரு தாயின் பங்கு எவ்வளவுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்துள்ளது. அவளுடைய முயற்சிகளுக்கும், அவள் தாங்கிக்கொள்ளும் துன்பங்களுக்கும், தன் குழந்தைகளுக்காக அவள் செய்யும் தியாகங்களுக்கும் முழுப் பாராட்டை அளிக்கிறது என்பதனைச் சுட்டிக் காட்டுவதோடு பின்வரும் ஹதீஸையும் ஆதாரம் காட்டுகின்றார். **இறைத்தூதர் ( ஸல் ) இவ்வாறு கூறினார்கள் "சொர்க்கம் தாயின் காலடியில் உள்ளது"** (நஸாயீ).*

*குழந்தை வளர்ப்பை பொறுத்த வரையில் அதற்காக இஸ்லாம் காட்டும் வழிகாட்டல்களில் ஆரம்ப கட்ட நடவடிக்கையானது தனக்கான சிறந்த துணையைத் தெரிவு செய்வதிலிருந்து ஆரம்பிக்கின்றது. அந்தவகையில் மார்க்கப்பற்றுள்ள நல்லொழுக்கமுள்ள பெண்ணைத் தெரிவு செய்யுமாறு இஸ்லாம் போதிக்கின்றது. இதன்மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் குழந்தைகள் நன்னெறியில் வளர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் திறந்து விடப்படுகின்றன (Shifa & Zakira,2020).*

***4.2 கல்வி, தொழில் துறைகளில் பெண்கள் எதிர்நோக்கக் கூடிய சவால்களும் இஸ்லாம் கூறும் வழிகாட்டல்களும்.***

*இன்றைய முஸ்லிம் பெண்கள், இலங்கையில் மட்டுமன்றி பொதுவாக உலகில் பெரும்பாலும் இஸ்லாம் எதிர்பார்க்கும் முஸ்லிம் பெண்களாக இல்லை. இன்றைய முஸ்லிம் பெண்களை இரண்டு வகையினராக வகுத்து நோக்கலாம்.*

***1.** முஸ்லிம் என்ற அடையாளப்படுத்தலோடு மட்டும் ( பெயரளவில் ) வாழ்பவர்கள்.*
***2.** இஸ்லாமிய வரம்புக்குள் வாழ்பவர்கள் அல்லது வாழ விரும்புபவர்கள் இவர்களை இரண்டு வகையினராக வகுத்து நோக்கலாம்*

- i. *மார்க்கத்தின் பெயரால் அளவு மீறிய கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்*
- ii. *மார்க்கத்தை சரியாகப் பின்பற்றி வாழும் உண்மையான முஸ்லிம் பெண்கள்*

*இதில் இரண்டாவது வகை முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வுகளை காணுதல் என்பது காலத்தின் தேவை என்பது மட்டுமன்றி சன்மார்க்கக் கடமையாகவும் அமைந்துள்ளது.*


ISBN: 978-624-5736-55-3

*இஸ்லாம் பெண்ணுக்கு நீதி வழங்குவதிலும் அவளைக் கண்ணியப்படுத்துவதிலும் ஏனைய மார்க்கங்களை விட உயர்ந்ததாகக் காணப்படுகின்றது.* ***"நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப் பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு கூடாது. பகிரங்கமான கெட்ட செயலை அவர்கள் செய்தாலொழிய, பெண்களுக்கு நீங்கள் கொடுத்ததிலிருந்து சிலவற்றை எடுத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் (துன்பம் கொடுத்து) தடுத்து வைக்காதீர்கள். இன்னும், அவர்களுடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள் - நீங்கள் அவர்களை வெறுத்தால் (அது சரியில்லை ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும் அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்தி விடலாம்*** *(அல்குர்ஆன் : 4:19). இந்த அல்குர்ஆன் வசனத்தில் கணவன் அவளை வெறுத்தாலும் அவளிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என உபதேசிப்பதை அவதானிக்க முடிகின்றது.*

*நபியவர்கள் தனது இறுதி ஹஜ் பேருரையிலும் பெண்கள் பற்றி உபதேசித்தார்கள். இதில் பெண்களுடன் முரண்பாடுகள் வரும் போது அதனை இஸ்லாமிய வழிமுறையில் தீர்க்கும் படிமுறை பற்றியும் கூறப்பட்டுள்ளன. இன்னும் நபியவர்கள் தங்களின் மனைவிகளுடன் வாழ்ந்த முறை பற்றியும் அது வன்முறையற்ற சிறப்பான குடும்பத்தை கட்டியெழுப்பிய விதம் பற்றியும் நபியின் வாழ்விலிருந்து அறிய முடியுமாகவுள்ளது. மனைவியிடத்தில் சிறந்தவராக இருக்கும் ஆண்களே சமூகத்திலும் சிறப்பானவராக இருப்பார். எனவே அதற்கான வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது (Hilma & Jazeel, 2021). எந்தவொரு குடும்பமும் இந்த வழிகாட்டல்களைப் பின்பற்றும்போது அது ஆரோக்கியமுடைய குடும்பமாக அமையும் என்பதில் ஐயமில்லை (மஸாஹிர் & பேகம், 2017). எனினும் சில தவறான புரிதல்களினால் குடும்பம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை இன்று முஸ்லிம் குடும்பங்களும் எதிர்நோக்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. அதன் அடிப்படையில் இஸ்லாமிய குடும்பக் கட்டமைப்பிலும் முஸ்லிம் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்கக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு முஸ்லிம் பெண் தனது உரிமைகளை அனுபவித்து தன் மீதான கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற முற்படுகின்ற போது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேருவது தவிர்க்க முடியாததாக அமைந்துவிடுகின்றது.*

*முஸ்லிம் மனைவி சமையல், சுத்தம் செய்தல் போன்றவற்றைச் செய்தாக வேண்டும் என்று சட்டம் வலியுறுத்துவதில்லை. ஆனாலும் வீட்டைப் பராமரிப்பவள் என்பதால் இத்தகைய அத்தியாவசிய வேலைகள் செய்யப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யும் பொறுப்பு அவளைச் சார்ந்தது. கணவனுக்கு வசதி இருந்தால் ஒன்று அல்லது இரண்டு பணியாட்களை அமர்த்தி, மனைவியின் கடுமையான வேலைச் சுமையைக் குறைப்பது அவனைச் சார்ந்தது. இக்காலத்தில் வீட்டு வேலைகளை எளிதாக்கும் சாதனங்களும் கிடைக்கின்றன. பணியாட்களை அமர்த்திக்கொள்ளும் வசதி கணவனுக்கு இல்லாவிட்டாலோ, மனைவி வீட்டுவேலைகள் செய்வதில் ஏற்கனவே பழக்கப்பட்டிருந்தாலோ, அவளுடைய உழைப்பு ஸதக்காவின் (தானம்) ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. இதற்கான பலனை அல்லாஹ்விடமிருந்து அவள் பெறுவாள் (ஆயிஷா லெமு, 2016).*


ISBN: 978-624-5736-55-3

*இதே போன்று, தனது உடற் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல், சகல செலவினங்களையும் பெற்றுக் கொள்ளல், அன்பு, கருணை பெறல், தனக்குரிய பாதுகாப்பைப் பெறல், மன நிறைவோடு வாழுதல், உறவுகளோடு சேர்ந்து உறவு பேணுதல், சமயக் கடமைகளை நிறைவேற்றல், கணவனது சொத்தில் வாரிசுரிமை பெறுதல் போன்ற பலஉரிமைகளை கொண்டுள்ளாள் (ஜுனைத், 2020). இன்னும் பெண்ணுக்கு ஆன்மா இருப்பது போல் அவளுக்கு உணர்வுகளும் தேவைகளும் இருக்கின்றன. இவற்றை மதிப்பதில் பொறுப்போடு நடந்து கொள்வது அவளது பொறுப்புதாரிகளின் கடமையாகும். சுத்தம், அலங்காரம், உடலியல் தேவைகள் எல்லாம் இதில் அடங்கும். குறிப்பாக குடும்ப விவகாரங்களில் இரு பாலாரும் கலந்தாலோசித்தே முடிவெடுக்க வேண்டும்.*

*உ.ம்: பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதற்கான இடைவெளியைத் தீர்மானிப்பதானாலும், பால் மறக்கடிக்கச் செய்வதானாலும் கலந்தாலோசிக்க வேண்டும். இதற்கு 2:233 எனும் அல்குர்ஆன் வசனம் சான்றாக அமைகிறது.*

*எனவே, இவற்றை எல்லாம் சரியான முறையில் செயற்படுத்துவது பெண்களின் பொறுப்பாளர்களது கடமையாகும். சில சமயங்களில், இஸ்லாமிய வாழ்க்கையின் உன்னத நிலையை விளங்கிடாத பலர் சிறிய பிரச்சினைக்கும் விவாகரத்து சிறந்த தீர்வு என முடிவெடுக்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பத்திலும் இஸ்லாம் பல நுணுக்கமான செயல்முறையினைக் கூறுகின்றது. விவாகரத்தை இஸ்லாம் விரும்பவில்லை (Hilma & Jazeel,2021). இது பற்றி* ***சூறா அந்நிஸா : 128. 129, 130*** *போன்ற வசனங்களிலும் இன்னும் பல இடங்களிலும் அல்குர்ஆனில் அதிக விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

*ஒரு முஸ்லிம் பெண் தன்னை அல்லாஹ்விற்கு அர்ப்பணித்துக்கொண்ட பிறகு இல்லம்தான் அவளுடைய கவனத்தின் மையமாக, கணவன் மற்றும் குழந்தைகளின் நலம் தான் அவளுடைய முன்னுரிமையாக இருக்கும். இதனால் அவள் வெளியே வேலைக்குச் செல்லக்கூடாது என்றோ, கல்வியைத் தொடரக்கூடாது என்றோ, சமூகத்திற்குத் தொண்டு செய்யக்கூடாது என்றோ எந்த விதமான தடையும் இல்லை (ஆயிஷா லெமு, 2016). பெண்ணானவள் சில சூழ்நிலைகளில் தொழில் செய்ய வேண்டியவளாக மாறுகின்றாள். எனினும் பெண்களின் பொருளதாரத் தேவைகளை நிறைவேற்றிக்கொடுப்பது ஆண்களது பொறுப்பும் கடமையுமாக இஸ்லாம் நோக்குகின்றது. ஆண்களுக்கு இருப்பது போல் பெண்களுக்கும் சில பொறுப்புக்களும் கடமைகளும் இருக்கின்றன.* ***"ஆணோ பெண்ணோ யார் இறை நம்பிக்கையாளர்களாக இருந்து கொண்டு நற்செயல் புரிகிறாரோ அவருக்கு நாம் நல்ல வாழ்வைக் கொடுப்போம்" (அந்நஹ்ல்:97)*** *என்பதாக அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுவதிலிருந்து இதனை புரிந்து கொள்ள முடியும்.*

*அதன்படி ஆணின் இயல்புக்கேற்ப அவனுக்குரிய பணிகளும் பெண்ணின் இயல்புக்கேற்ப அவளுக்குரிய பணிகளுமுண்டு. தேவையான சந்தர்ப்பங்களில் முஸ்லிம் பெண் வீட்டுக்கு வெளியில் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவாள். ஆனால் மேற்குலகப் பெண்கள் போன்று எத்தொழிலையும் எங்கும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாள். அவ்வாறு ஒரு பெண் தொழில் செய்யும் பொழுது அதற்கென்று இஸ்லாம் கூறக்கூடிய வழிகாட்டல்களை பின்பற்றுவதோடு மஹ்ரமி, அஜ்னபி கட்டுப்பாட்டைப் பேணி, இஸ்லாமிய அடிப்படையில் வாழ்வதுதான் இதற்கான தீர்வாக அமைகின்றது. இன்னும் இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள் உயர் பதவிகளை*


ISBN: 978-624-5736-55-3

*வகிக்கவில்லை என நினைப்பது தவறு. சட்டம் புகட்டுவதற்கு அனுமதிபெற்ற சட்ட அறிஞர்களாக, சரித்திர, இலக்கிய விரிவுரையாளர்களாக, கவிஞர்களாக, மார்க்கப் போதகர்களாக இஸ்லாமியப் பெண்கள் பணியாற்றியுள்ளனர். ஓர் ஆணைப் போலவே ஒரு பெண்ணும் நீதிபதியாகக் கடமையாற்றலாம் என ஹனபி மத்ஹபின் இமாம் அபூஹனீபா அவர்கள் கூறியுள்ளார் (வீர மந்திரி, 2009). எனவே, இவை இஸ்லாத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் பெண்களை எச்சந்தர்ப்பத்திலும் பாதிக்கக் கூடியனவாக அமையவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.*

*இல்லற வாழ்வில் இன்பத்தை மட்டும் எதிர்ப்பார்க்கக் கூடாது. அதில் பல பிரச்சினைகள், துன்பங்கள், கஷ்டம், திருப்தியின்மை போன்ற பல கோணல்கள் ஏற்படும். அதை முறையே இருவருமே பேசித் தீர்த்துக் கொள்வது அவசியம். விட்டுக்கொடுப்புக்கள், சகிப்புத்தன்மை, தியாகம் பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, புரிந்துணர்வு என்பவற்றை கணவன் மனைவி தன் குடும்ப வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமே விவாகரத்து எனும் விடயத்தைக் குறைக்க முடியும். குறிப்பாக பெண்கள் மீது அன்பு காட்டுவது, அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றி நபி அவர்கள் வலியுறுத்தியுள்ளமையினால் அதனைப் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களின் வீடுகளில் பெண்கள் மீது அநீதி விளைவிக்கும் வன்முறைகள் நிகழாது. சூரா நிஸாவின் 34 ஆம் வசனம் பிணக்குகளைப் படிப்படியாக தீர்க்கும் வழிமுறைகளை கற்றுத் தந்துள்ளது.*

*கணவனின் கோபத்தை தணிக்கச் செய்யும் இவ்வசனம் மனைவி மீதான வெறுப்பின் வேகத்தை குறைத்து அவளை பாதுகாக்கிறது. இங்கு தோன்றவிருக்கும் பல பிரச்சினைகளையும் வன்முறைகளையும் இஸ்லாம் தடுத்து பெண்களை வன்முறையற்ற குடும்பங்களில் வாழ வைக்க எத்தணிக்கின்றது* (*Hilma & Jazeel, 2021இன்னும், இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதற்காக பாடசாலைகளுக்கும், சர்வ கலாசாலைகளுக்கும், மற்றுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கும் செல்வதற்கு உள்ள அனுமதி தொடர்பாக நோக்கும் பொழுது இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய கூடிய கல்வி உரிமை தொடர்பான அறிவைப் பெறுதல் இத்தகைய சவால்களுக்கான சிறந்த தீர்வாக அமைய வல்லது.*

*இது பற்றி அப்துல்லா (2021) என்பவர் கூறும்போது, ஒரு ஆண் கல்வித்துறையில் முன்னேறிச் செல்வதைப்போன்று பெண்களும் ஈடுபடுவதற்கான உந்துதலை இஸ்லாம் வழங்குகிறது. ஆரம்பகால இஸ்லாமிய சமூகத்தில் கல்வி ரீதியான பெண்களின் பங்களிப்பு பல்வேறு வழிகளில் பிரதிபலித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய அறிஞர்களுள் ஒருவரான இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள் இறைதூதரின் தோழர்களின் வரலாற்றைத் தொகுத்த "அல்இஸாபா" எனும் நூலில் 1500 க்கு மேற்பட்ட நபித்தோழியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் பலர் இஸ்லாமிய சட்டத்துறை, ஹதீஸ் துறை மற்றும் இலக்கியத்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஆழ்ந்த புலமை கொண்டவர்களாவர் என்று குறிப்பிட்டு, எடுத்துக்காட்டாக நபியவர்களின் மனைவியர்களான ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி), உம்மு ஸலமா (ரழி), ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) போன்றோரும் நபியவர்களின் மகளான பாத்திமா (ரழி), அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழி) போன்றோரும் இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு ஹதீஸ்களை அறிவித்ததோடு இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு*


ISBN: 978-624-5736-55-3

விவகாரங்களுக்கான தீர்ப்புக்களை வழங்குவோராகவும் காணப்பட்டனர் என்பதை தனது ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளார். இன்னும் அதே போன்று, கன்ஸா (ரழி), ஷைமா பின்த் அல்ஹாரிஸ் (ரழி), ஆதிகா பின்த் ஸைத் (ரழி) போன்றோர் இலக்கியத்துறையில் பிரபலம் பெற்றவர்களாவர் என்றும் மேலும் ஷிபா பின்த் அப்தில்லாஹ் எனும் பெண் கற்பித்தல் மற்றும் மருத்துவ துறைகளில் பிரபலமானவராகக் காணப்பட்டவராவார் என்பதும் போன்ற பல்வேறு உதாரணங்களை சுட்டிக்காட்டுகின்றார்.

எனவே, இத்தகைய இஸ்லாமிய சான்றுகள் மூலம் ஒரு பெண்ணானவள் தன்னுடைய அறிவினை மேம்படுத்திக் கொள்வது அவளுடைய உரிமையாக கருதும் அதேவேளை அறிவை தேடாமல் இருப்பது இஸ்லாத்தின் பார்வையில் கண்டிக்கத்தக்க விடயம் என்பதையும் புரிந்துகொள்ள முடியுமாகின்றது. அந்த வகையில் கல்வி சார்ந்த சவால்களை ஒரு பெண் எதிர்நோக்க வேண்டி ஏற்படும் பொழுது அச்சந்தர்ப்பத்தில் இஸ்லாம் கூறக்கூடிய வழிகாட்டல்களை சரியான முறையில் கடைப்பிடிப்பதன் மூலமாக அத்தகைய சவால்களுக்கு தீர்வு காண முடியுமாகின்றது. ஐரோப்பிய நாகரீகத்தில் தற்போது தாய் என்ற நிலையில் தன் பிள்ளைகளுக்கு முழுமையாக பாலூட்டும் உரிமையை இழந்துள்ளார். அங்கு பொது இடங்களில் தன் உடலை வெளிக்காட்டும் உரிமை பெற்ற அளவு தன் உடலை மறைப்பதற்கு உரிமை பெறவில்லை (ஜுனைத், 2020) போன்ற பல மாறுபட்ட விளைவுகள் ஏற்பட்டுள்ளன. எனவே, முஸ்லிம் பெண்களுடைய நிலை தொடர்பாக நோக்கும்பொழுது இஸ்லாம் கூறக்கூடிய வழிமுறைகளையும், உலகம் நோக்குகின்ற மற்றும் நடைமுறைப்படுத்துகின்ற கண்ணோட்டங்களையும் கருத்திற்கொண்டே அவை தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

### 5. முடிவுரை

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் பூரண வழிகாட்டல்களை உள்ளடக்கிய மார்க்கமாகும். அந்தவகையில் அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் ஆகியவற்றை முதன்மை மூலாதாரங்களாகக் கொண்ட இஸ்லாத்தில் பெண்கள் தொடர்பான கண்ணோட்டமும் மிகவும் தெளிவானதும் நேர்மையானதுமாகும். இஸ்லாம் பெண்களின் அந்தஸ்து மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பில் குறிப்பிட்டிருப்பது மாத்திரமன்றி இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலங்களில் சமூக, பொருளாதார அரசியல் சார்ந்த பல்வேறு துறைகளில் அவர்கள் பங்களிப்புச் செய்வதற்கான உரிமையும் சுதந்திரமும் உத்தரவாதப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்துள்ளன. எனினும் பெண்கள் தொடர்பிலான இஸ்லாமிய வழிகாட்டல்களைக் கவனத்தில் கொள்ளாது தற்கால நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்துக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன (அப்துல்லா, 2021).

இதில் இஸ்லாமிய குடும்ப கட்டமைப்பில் பெண்களின் முக்கியத்துவம், அவர்கள் கல்வி, தொழில் துறைகளில் எதிர்நோக்கக் கூடிய சவால்ளுக்கான தீர்வுகள், இஸ்லாம் குடும்ப அமைப்பிற்கு வழங்கக்கூடிய முக்கியத்துவம் ஆகியன எக்காலத்திற்கும் ஏற்ற வகையிலும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் அமைந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. பெண்கள் தொடர்பாக எழக்கூடிய அனைத்து பிரச்சினைகளுக்கும் இஸ்லாம் அழகான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஆண்களுக்கு வழங்கப்படாத சலுகைகளும் உரிமைகளும் கூட இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருக்கின்றது. இது


ISBN: 978-624-5736-55-3

*பெண்களுக்கு இஸ்லாம் வழங்கக்கூடிய முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் இத்தகைய விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அமைப்பிலேயே பெண்கள் பல சவால்களை சந்திக்க நேரிடுகின்றனர். எனவே இதனை இஸ்லாம் காட்டக்கூடிய வழிமுறைகளில் நின்றும் தீர்வு பெற வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இவற்றினை கையாளும் பொழுது நவீன கோட்பாடுகளால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களிலிருந்து சரியான வழிமுறையை தெரிவு செய்து கொள்வது மிக முக்கியமான அம்சமாகும்.*

## References


Abdullah M. M. A. (2021). Islāttil peṇkaḷiṉ urimaikaḷ: oru kōṭpāṭṭu rītiyilāṉa pārvai [Women's rights in Islam: A theoretical perspective]. *Muallim Journal of Social Science And Humanities*, *5*(1), 84–99. https://doi. org/10. 33306/mjssh/114

Bintul Islam. (2003). *உறவுகளும் உரிமைகளும்.* (A. A. Rashadi, Trans. ) (1st ed. ). Islamic Foundation Trust . India.

Inamullah, M. (2022). Retrieved March 25, 2022, from https://www. facebook. com/1216090559/posts/10229275686976140/?sfnsn=mo

Rishard Najimudeen. (2020, September 16). *பெண்களுக்கு அடித்தல் - பிழையாக புரியப்பட்ட அல்குர்ஆன் வசனம்.* Rishard Najimudeen. Retrieved March 26, 2022, from https://www. rishardnajimudeen. com/?p=13494

Shifa, J. N. , & Zakira, B. (2020). *இஸ்லாமிய குழந்தை வளர்ப்பிற்கும் நவீன குழந்தை வளர்ப்பிற்கும் இடையிலான ஓர் ஒப்பீடு. ஆய்வுக் குரல்,* (02), 35–41.

*அப்துர் ரஹ்மான்.* (2021). *குடும்ப அமைப்புக்கு இஸ்லாம் அளித்துள்ள முக்கியத்துவம்*: *Thinakaran*. Retrieved March 26, 2022, from http://www. thinakaran. lk/2021/07/30/%E0%AE%87%E0%AE%B8%E0% %AA

*ஆயிஷா லெமு. (2016). முன்மாதிரி முஸ்லிம் மனைவி. (லரீனா, Trans. ) (1st ed. ). மாற்றுப் பிரதிகள்.*

*கபூர்தீன்* K *(2018). பதின்பருவ முஸ்லிம் பெண்களுக்கான கையேடு. (உமா பாலு,* Trans.*)* (1st ed.). *இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் சென்னை.*

*ஜுனைத்* A N*. (2020). சமூகவியலும் சமூக நல்லிணக்கமும். இஸ்லாமிய நாகரிகம் -4 (1st ed., pp. 266–295). essay.*

*மஸாஹிர் S. M. M & பேகம் M. S. I. (2017). இஸ்லாம் நம்பிக்கைகளும் கோட்பாடுகளும் (*1st ed, *pp. 234–258). அல்ஹதஃப் வெளியீட்டகம். கொழும்பு.*



ISBN: 978-624-5736-55-3

மஸ்ஹுர் ஸகரிய்யா. (2012). Log into Facebook. Facebook. Retrieved March 26, 2022, fromhttps://m. facebook. com/482271285140259/posts/483121411721913/ ?refsrc=deprecated&_rdr

*றியாஸ் முஹம்மத்* M S. (2012). February 18). *நவீன இஸ்லாமிய குடும்பம் எதிர்நோக்கும் சவால்களும் தீர்வுகளும்*. Retrieved March 26, 2022, from http://kalvivali. blogspot. com/2012/02/normal-0-false-false-false-en-us-x-none_18. html?m=1


ISBN: 978-624-5736-55-3